இந்துசமய அறநிலையத்துறை

# யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாம் 2015–16

## தேக்கம்பட்டி – மேட்டுப்பாளையம்

மின்னஞ்சல் : elephantcamp@tnhrce.org

நாள் 07.02.2016

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயில் அருகிலுள்ள பவானி ஆற்றுப்படுகையில் நடைபெற்று வரும் யானைகள் சிறப்பு நலவாழ்வு முகாமிற்கு சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி1.1.) துறை அரசாணை (வா) எண் 23 நாள் 04.02.2016 உத்தரவுபடி, திரு. மா. சங்கரநாராயணன், பிரிவு அலுவலர் தலைமையில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையில் பணிபுரியும் 13 அலுவலர்கள் 07.02.2016 ம் நாள் வருகை புரிந்து ஆய்வு மேற்கொண்டார். முகாமை சுற்றி பார்த்தும் மற்றும் யானைகள் குளியல் மேடையை மற்றும் பார்வையிட்டும் பின்னர் முகாமில் உள்ள யானைகளை தூய்மையான சூழலில் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தனர். மேலும் வழக்கம் போல் முகாமில் காலை நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் பூவாளி குளியல் மேடையில் ஆனந்தமாய் நீராடி காலை உணவு மற்றும் சத்து மாத்திரைகள்உண்டு தமது இடங்களுக்கு சென்று ஓய்வெடுக்கத் துவங்கின. கூந்தல்பனை, தென்னை மட்டை ஆகிய பசுந்தீவனங்கள் வழங்கப்பட்டது. மாலையில் நடைபயிற்சி மேற்கொண்ட யானைகள் மாலை உணவருந்தி ஓய்வெடுக்கத் துவங்கின.

